செ.வெ.எண்: 782 நாள்: 28.11.2020

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மின்சாரப் பணியாளர் தொழிற்பிரிவில் காலியாகவுள்ள இரண்டு ஒப்பந்தப் பயிற்றுநர் பணியிடத்திற்கு மாதம் ரூ.10,000/- தொகுப்பூதியத்தில் கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

---

**வயது:**

**01.07.2020 அன்று அரசு விதிகளுக்குட்பட்டு 18 வயது இருக்க வேண்டும். (அரசு விதிகளின்படி வயது வரம்பில் தளர்வு உண்டு)**

**இனசுழற்சி: பொது சுழற்சி (GENERAL TURN NON PRIORITY)**

**கல்வித்தகுதி:**

**அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கல்லூரி , பல்கலைக்கழகத்திலிருந்து எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் , எலக்ட்ரிக்கல் மற்றும் எலட்ரானிக் இன்ஜினியரிங் பிரிவில் பட்டம் மற்றும் ஓராண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.**

**அல்லது**

**அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தால் வழங்கப்படும் எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் , எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் இஞ்சினியரிங் பிரிவில் டிப்ளமோ மற்றும் 2 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.**

**அல்லது**

**10-ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தொழிற்பயிற்சி நிலைத்தில் எலக்ட்ரீசியன் தொழில்பிரிவில் தேசிய தொழிற்சான்றிதழ், தேசிய தொழில் பழகுநர் சான்றிதழ் பெற்று மூன்றாண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.**

**விண்ணப்பங்களை துணை இயக்குநர்/முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தஞ்சாவூர்-613007. என்ற முகவரிக்கு 09.12.2020 மாலை 5.45 மணிக்குள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் சரிவர பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது எனத் தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய துணை இயக்குநர்/முதல்வர்** தெரிவித்துள்ளார்.

,

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்

.